

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.09.2025) காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கே.எம்.ராம்பிரசாத் அவர்கள் விபத்தில் மறைவுற்றதைத் தொடர்ந்து அவரது மனைவி திருமதி. ஆர்.லாவண்யா அவர்களுக்கு தி.மு.க. சார்பில் ரூ.10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். உடன் பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.,அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணைப் பொதுச்செயலாளர்கள் திருச்சி சிவா, எம்.பி., அந்தியூர் செல்வராஜ், எம்.பி., காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கூடுவாஞ்சேரி நகரச்செயலாளர் எம்.கே.டி. தண்டபாணி, பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.09.2025) கடலூர் மேற்கு மாவட்டம் குப்புசாமி அவர்கள் விபத்தில் மறைவுற்றதைத் தொடர்ந்து அவரது மனைவி திருமதி. கே.சரண்யா அவர்களுக்கு தி.மு.க. சார்பில் ரூ.10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். உடன் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணைப் பொதுச்செயலாளர்கள் திருச்சி சிவா, எம்.பி., அந்தியூர் செல்வராஜ், எம்.பி., கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன், நெய்வேலி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் சபா.ராஜேந்திரன், எம்.எல்.ஏ., செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் குணசேகரன் உள்ளனர்.

## மதுரையில் கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, சாலை விபத்தில் மரணமடைந்த

# மூன்று கழகத்தினரின் குடும்பத்திற்கு தலா ரூ.10 லட்சம் வீதம் ரூ. 30 லட்சம் குடும்ப நிதி!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. சார்பில் வழங்கினார்!



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.09.2025) திருவாரூர் மாவட்டம் எம்.விக்னேஷ் அவர்கள் விபத்தில் மறைவுற்றதைத் தொடர்ந்து அவரது மனைவி திருமதி. ஜாய்எப்சியா அவர்களுக்கு தி.மு.க. சார்பில் ரூ.10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். உடன் பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், நீடாமங்கலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கே.வி.கே.ஆனந்த் உள்ளனர்.

சென்னை, செப்.24-

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த திருவாரூர் மாவட்டம் எம்.விக்னேஷ் - கடலூர் மேற்கு மாவட்டம் குப்புசாமி மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கே.ஏ.ராம்பிரசாத் ஆகிய மூன்று குடும்பத்திற்கும் தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 30 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். இதுவரை 6 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், கடந்த 2.8.2025 அன்று விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா - 12.6.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்செல்வன் - 23.7.2025 அன்று ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் ஆகியோர் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து, 5.6.2025 அன்று திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான எம்.விக்னேஷ் அவர்கள், திருவாரூர் - கும்பகோணம் மெயின் ரோடு, வடகண்டம் ரைஸ்மில் வளைவில், வாகன விபத்தில் சிக்கியும் 5.6.2025 அன்று கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான குப்புசாமி அவர்கள், கும்பகோணம் - சென்னை சாலையில் கீழ்வடக்குத்து தவபாலன் வீட்டின் எதிர் சாலையில் வாகன விபத்தில் சிக்கியும் - 23.7.2025 அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான கே.ஏ.ராம்பிரசாத் அவர்கள், ஜி.எஸ்.டி. சாலை சீனிவாசபுரம் சிக்னலில் எஸ்.பி.ஐ வங்கி ஏ.டி.எம். வாசலில் நின்றிருந்தபோது அரசுப் பேருந்து மோதியும் சம்பவ இடத்திலேயே மூன்று பேரும் உயிரிழந்துவிட்டனர்.

விபத்தில் சிக்கி உயிரிழந்த மேற்சொன்ன மூவரின் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் பத்து இலட்சம் வீதம் ஆக மொத்தம் ரூபாய் 30 இலட்சத்திற்கான காசோலையினை, முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், திருவாரூர் மாவட்டம் எம்.விக்னேஷ் அவர்களின் மனைவி திருமதி ஜாய்எப்சியா அவர்களிடமும்- கடலூர் மேற்கு மாவட்டம், குப்புசாமி அவர்களின் மனைவி கே.சரண்யா அவர்களிடமும் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கே.எம்.ராம்பிரசாத் அவர்களின் மனைவி திருமதி ஆர்.லாவண்யா அவர்களிடமும் நேற்று (23.09.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி சிவா எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், அண்ணா அறிவாலய மேலாளர் பத்மநாபன், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், நெய்வேலி சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. கூடுவாஞ்சேரி நகரச் செயலாளர் எம்.கே.டி.தண்டபாணி, பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார், நீடாமங்கலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கே.வி.கே.ஆனந்த், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சிவகங்கை மாவட்டத்தில்

# அகல் விளக்கு நிகழ்ச்சி - தலைமை ஆசிரியர்கள் ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் – அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்பு!

*சிவகங்கை, செப். 24 -*

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் சிவகங்கை மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற அகல் விளக்கு நிகழ்ச்சி மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டம் ஆகிய நிகழ்வுகளில் பங்கேற்று சிறப்பித்தனர்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் சிவகங்கை மாவட்டத்தில், நேற்று முன்தினம் (22.09.2025) பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூட்ட அரங்கில் நடைபெற்ற அகல் விளக்கு நிகழ்ச்சி மற்றும் சிவகங்கை மருது பாண்டியர் நகர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாக கூட்டரங்கில் நடைபெற்ற தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வு கூட்டம் ஆகிய நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கா.பொற்கொடி தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் பங்கேற்று சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் பேசியதாவது : -

முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவ, மாணவியர்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் கல்வி முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வித் தரம், மாணவர் நலன், மகிழ்ச்சியான கற்றல் சூழல், சுற்றுச்சூழல், ஆசிரியர்மாணவர் நல்லுறவு உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் தனிக்கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் தொடர் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு மாணவ, மாணவியர்களின் கற்றல் திறன் மேம்படும் வகையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், பள்ளி மற்றும் மாணவர்களின் கல்வித்தரம் குறித்து தொடர் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். பல்வேறு விதமான சூழ்நிலைகள் மற்றும் மனநிலைகளில் வரும் மாணவ, மாணவியர்களுக்கு ஏற்றவாறு அவர்களை வழிநடத்தி சிறந்த பண்புடைய மாணவர்களாக உருவாக்க வேண்டிய கடமை ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு உள்ளது எனப் பேசினார்.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் தொடக்க நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான அடைவுத் தேர்வு (SLAS) சார்ந்த ஆய்வுக் கூட்டம் இன்றைய தினம் நடத்தப்பட்டது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் 2024-25ஆம் கல்வியாண்டில் அனைத்து வகை அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 3, 5, 8ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மாநில அளவிலான அடைவு ஆய்வு (SLAS) 04.02.2025, 05.02.2025 மற்றும் 06.02.2025 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இத்தேர்வுக்கு முன்னேற்பாடாக மொழிப்பாடங்களில் மாணவர்களின் வாசிப்பு மற்றும் புரிந்து கொள்ளும் திறனை மதிப்பிடும் வகையிலும், கற்றல் விளைவுகளின் அடிப்படையிலும் மாதிரி வினாக்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்தில் மாநில அளவிலான அடைவுத் தேர்வினை (SLAS) 3ஆம் வகுப்பில் 1085 பள்ளிகளில் உள்ள 7458 மாணவர்களுக்கும். 5ஆம் வகுப்பில் 1089 பள்ளிகளில் உள்ள 8207 மாணவர்களுக்கும் மற்றும் 8ஆம் வகுப்பில் 500 பள்ளிகளில் உள்ள 8223 மாணவர்களுக்கும் அடைவு ஆய்வு நடத்தப்பட்டது. மொத்தம் சிவகங்கை மாவட்டத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 3, 5, 8ஆம் வகுப்பு மாணவர்களின் மொத்த அடைவுத் திறன் 60.7 சதவீதத்துடன் மாநில அளவில் 10ஆம் இடம் பெற்றுள்ளது. இந்த ஆண்டு SLASல் 10ஆம் இடம் பெற்ற சிவகங்கை மாவட்டத்தினை அடுத்து வருகின்ற SLASல் முதல் 5 இடங்களுக்குள் வரவேண்டும்.

இவ்வாறு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநர் திரு. மா.இராமகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரையாற்றி அனைத்து நிலை தலைமையாசிரியர்களுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்கினார். சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருமதி. கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரையாற்றி எதிர்வரும் காலங்களில் மாணவர்களின் அடைவுத் திறனை மேம்படுத்த வழிகாட்டுதல்கள் வழங்கினார். பின்னர் சிறப்புரையாற்றிய மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் கோ.முருகன் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் மாணவர்களின் கல்வி அடைவினை மேம்படுத்த தேவையான செயல்திட்டத்தினை அறிக்கையாக சமர்ப்பித்தார்.

இந்நிகழ்வின் போது, அக்கூட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ரூ.8.70 இலட்சம் மதிப்பிலான LED. திரை அமைப்பினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இணைந்து திறந்து வைத்தனர்.

முன்னதாக, 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவிகள் இணைய தளத்தினை பாதுகாப்பாக கையாள்வது குறித்து வழிகாட்டும் விதமாக சிவகங்கை மாவட்டத்திலுள்ள 138 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியைகளுக்கு பயிற்சி வழங்கும் வகையில் 'அகல் விளக்கு' என்ற திட்டம் குறித்து பயிற்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் வழங்கப்பட்டது.

இப்பயிற்சியில் 'அகல் விளக்கு' என்ற திட்டம் குறித்தும் இணையதள பயன்பாடு குறித்தும் உறுதி மொழி எடுக்கப்பட்டது. இதில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி. ஆ.தமிழரசி ரவிக்குமார், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநர் மா.இராமகிருஷ்ணன், சிவகங்கை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் கோ.முருகன் மற்றும் விரிவுரையாளர்கள் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) சே.மாரிமுத்து, மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் கோ.முருகன், மாவட்டக் கல்வி அலுவலர்கள் செந்தில்குமார், ராஜேந்திரன், மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) வடிவேல் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உதவித் திட்ட அலுவலர் அ.பீட்டர் லெமாயு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.